பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
22 06 2024 **SATURDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி. திரெளபதி முர்மு வரும் 27ஆம் தேதி உரையாற்றுகிறார்.

2. பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒருங்கிணைந்த பேச்சுக்களை தொடங்குவதென இந்தியாவும், பங்களாதேஷும் முடிவு செய்துள்ளன.

3. மாநிலங்களுக்கான நிதி பகிர்வினை மத்திய அரசு உரிய நேரத்தில் வழங்கி வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் கள்ளக்சாராயம் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் மாநில அரசு உறுதியுடன் உள்ளதாக சட்ட அமைச்சர் திரு. எஸ். ரகுபதி தெரிவித்துள்ளார்.

5. உலக கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் Priyansh வெள்ளிப்பதக்கதம் வென்றார்.

>>>><<<<

நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி. திரெளபதி முர்மு வரும் 27ஆம் தேதி உரையாற்றுகிறார்.

மக்களவை கூட்டத்தொடர் வரும் திங்கட்கிழமையும், மாநிலங்களவை கூட்டத்தொடர் வரும் வியாழக்கிழமையும் தொடங்குகிறது.

மக்களவையில் புதிய உறுப்பினர்களுக்கு இடைக்கால பேரவைத் தலைவர் திரு. Bhartruhari Mahtab பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

மக்களவைத் தலைவர் தேர்தல் வரும் 26ஆம் தேதி நடைபெறும்.

இந்த கூட்டத்தொடர் அடுத்த மாதம் 3ஆம் தேதிவரை நடைபெறும்.

>>>><<<<

பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒருங்கிணைந்த பேச்சுக்களை தொடங்குவதென இந்தியாவும், பங்களாதேஷும் முடிவு செய்துள்ளன.

அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள பங்களாதேஷ் பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனா இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் நடத்திய பேச்சுக்களின் போது இதற்கான முடிவு எட்டப்பட்டது.

பங்களாதேஷிலிருந்து மருத்துவ சிகிச்சை மேற்கொள்வதற்காக இந்தியா வருபவர்களுக்கு மின்னணு மருத்துவ விசா வழங்கப்படும் என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

பங்களாதேஷின் Rangpur-ல் இந்திய துணைத் தூதரகம் தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கங்கை நதிநீர் ஒப்பந்தம் தொடர்பான தொழில்நுட்ப ரீதியிலான பேச்சுக்களை மீண்டும் தொடங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

பங்களாதேஷின் நட்பு நாடாக இந்தியா திகழ்கிறது என்று திருமதி. ஷேக் ஹசீனா கூறினார்.

பிரதமராக தொடர்ந்து மூன்றாவது முறையாக பொறுப்பேற்றுள்ள திரு. நரேந்திர மோடி, பங்களாதேஷ்க்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்த திரு. நரேந்திர மோடியின் பயணம் உதவிடும் என்றும் திருமதி. ஷேக் ஹசீனா கூறினார்.

இந்த பேச்சுக்களுக்குப் பின்னர், இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

சுதாதாரம், விண்வெளி, ரயில்வே உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

மாநிலங்களுக்கான நிதி பகிர்வினை மத்திய அரசு உரிய நேரத்தில் வழங்கி வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனைக் கூட்டத்தின் ஒரு பகுதியாக, மாநில நிதியமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றினார்.

சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு நிலுவைத் தொகையும், மாநிலங்களுக்கு வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மூலதன முதலீட்டிற்கான சிறப்பு நிதியுதவி திட்டத்தை மாநில அரசுகள் அதற்கான நெறிமுறைகளை பின்பற்றி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழக நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, பேரிடர் பாதித்த மாநிலங்களுக்கு கூடுதல் நிதியை மத்தியஅரசு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 3 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் திரு. தங்கம் தென்னரசு வலியுறுத்தினார்.

>>>><<<<

தேசிய தேர்வு முகமையின் கீழ் நடத்தப்படும் தேர்வுகள் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறுவதை உறுதி செய்வதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக உயர்நிலை நிபுணர் குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரோ முன்னாள் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் இந்த உயர்நிலைக் குழுவிற்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் முன்னாள் இயக்குநர் டாக்டர் Randeep Guleria, சென்னை ஐஐடி பேராசிரியர் திரு. ராமமூர்த்தி உட்பட ஆறு பேர் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வித்துறையின் இணைச்செயலர் திரு. Govind Jaishwal உறுப்பினர் செயலராக நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தக்குழு இரண்டு மாதங்களுக்குள் தங்களது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மாணவர்களின் நலனுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் தேர்வுகள், வெளிப்படைத்தன்மையுடனும், எவ்வித சிறு தவறுக்கும் இடமளிக்காமல் நடைபெறுவது உறுதி செய்யப்படும் என்றார்.

இதன் அடிப்படையில் தான், உயர்நிலை நிபுணர் குழு அமைக்கப்பட்டிருப்பதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

>>>><<<<

வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உருவாக்குவதற்கான இலக்குகளை எட்டுவதில் பொதுத்துறை நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்தியா பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையாக செயல்பட்டு வருவதாக கூறினார்.

சில துறைகளில் உலக நாடுகளை விட இந்தியா சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பொதுத்துறை நிறுவனங்கள் ஆற்றி வரும் பங்களிப்பையும் அவர் எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பாக செயல்பட்ட பொதுத்துறை நிறுவனங்களுக்கான விருதுகளையும் டாக்டர் ஜிதேந்திர சிங் வழங்கினார்.

>>>><<<<

'புதிய குற்றவியல் சட்டங்கள் 'குறித்த சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னை அகில இந்திய வானொலியில் நாளை ஒலிபரப்பாகிறது.

மாநில செய்திப் பிரிவு வழங்கும் இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் திரு. வசந்தகுமார், திருமதி. ஸ்மிருதி ஆனந்தன், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

நாளை இரவு 8.30-மணிக்கு பிரதான அலைவரிசையில் ஒலிபரப்பாகவுள்ள இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

>>>><<<<

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவத்தை அரசியலாக்குவதற்கு இடம் கொடுக்க மாட்டோம் என்று தமிழக சட்ட அமைச்சர் திரு. எஸ். ரகுபதி கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கள்ளச்சாராயம் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் தமிழக அரசு உறுதியுடன் இருப்பதாக கூறினார்.

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் இருக்க முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

மத்தியப் பிரதேசத்தில் மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்துவது குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

மெட்ரோ ரயில் திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக திரு. மோகன் யாதவ் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

Ujjain – Indore இடையே இந்த ரயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை பெறப்பட்டிருப்பதாகவும் முதலமைச்சர் கூறினார்.

>>>><<<<

ஒடிசா முதலமைச்சர் திரு. Mohan Charan Majhi அம்மாநிலத்தின் நீர்வளத்துறையின் செயல்பாடுகள் குறித்து இன்று ஆய்வு மேற்கொண்டார்.

முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் துறைவாரியாக மேற்கொண்டு வரும் ஆய்வின் ஒரு பகுதியாக, இந்த கூட்டம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தின் கூட்டம், புதுதில்லியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மின்னணு சாதன உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

மின்னணு பொருட்களுக்கான உத்தரவாதம் குறித்த விவரங்களை, நுகர்வோருக்கு தெளிவாக எடுத்துரைக்க வேண்டும் என்று இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

நுகர்வோரின் பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வு காண்பதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட அம்சங்கள் தொடர்பான கருத்துக்களை மின்னணு சாதன உற்பத்தி நிறுவனங்கள் 15 தினங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

>>>><<<<

இந்தியாவுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்த விரும்புவதாக இலங்கை அதிபர் திரு. ரனில் விக்கிரமசிங்கே கூறியுள்ளார்.

இன்று கொழும்பில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த போது, இந்தியா நிதியுதவி அளித்ததை சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் இந்த நடவடிக்கை இலங்கையின் பொருளாதாரத்தை மீட்க உதவியதாக அவர் கூறினார்.

இதற்காக இலங்கை, என்றென்றும் இந்தியாவுக்கு நன்றிக்கடன்பட்டிருப்பதாக திரு. ரனில் விக்கிரமசிங்கே தெரிவித்தார்.

>>>><<<<

யுக்ரைன் மீது பெரிய அளவிலான தாக்குதலை ரஷ்யா மீண்டும் நடத்தியுள்ளது.

Lviv-ல் உள்ள மின்விநியோக கட்டமைப்பை குறி வைத்து ரஷ்யா இந்த தாக்குதலை நடத்தியதாக யுக்ரைன் கூறியுள்ளது.

ரஷ்யாவின் 16 ஏவுகணைகளையும், 13 ட்ரோன்களையும் சுட்டு வீழ்த்தியதாக, யுக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

>>>><<<<

உலக கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது

துருக்கியின் Antaliya-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் குழுப் பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் Priyansh வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>><<<<

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

Antigua-வில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

>>>><<<<

பிரிக்ஸ் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இன்று இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ரஷ்யாவின் **Kazan**–ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் வாள் வீச்சுப் பிரிவில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

இப்போட்டியில் இதுவரை இந்தியா ஒரு தங்கம், 3 வெள்ளி, 14 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 9-வது இடத்தில் உள்ளது.

>>>><<<<

Lagos-ல் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sreeja Akula அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 3-0 என்ற ஆட்டக்கணக்கில் இந்தியாவின் Yashaswini Ghorpade–ஐ வென்றார்.

இதர ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் Sutirtha Mukherjee மற்றும் Ayhika Mukherjee வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றனர்